OS 49/2021

வா.சா.2 சம்பத் த/பெ பொன்னுசாமி

நாள் 10.03.2026

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்திருந்தது. எனக்கு பத்திரம் எழுதும் தொழிலில் 29 வருடம் அனுபவம் இருக்கிறது. பத்திரம் எழுதுவதற்கான உரிமம் எனக்கு இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த உரிமம் எத்தனை வருடங்களுக்கு இருக்கிறது என்றால் 2028 வரை இருக்கிறது. நான் தயார் செய்யும் பத்திரத்தில் பத்திரம் எழுதியவர் என்ற இடத்தில் நான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்யும் போது கையொப்பம், ஊர் பெயர் மற்றும் உரிமம் எண் ஆகியவற்றை குறிப்பிடுவேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதி தெரியுமா என்றால் பத்திரம் எழுதி கொடுத்த அடிப்படையில் தெரியும். ஆவணத்தில் தட்டச்சு செய்யும் பணியை நான் செய்வேனா என்றால் இல்லை வேறு நபர் பார்ப்பார். தட்டச்சு செய்யப்பட்ட ஆவணத்தில் நான் ஆவண தரப்பினர்களின் கையொப்பம் பெற்று எனது கையொப்பத்தை செய்து பதிவுக்கு அனுப்புவேன். வா.சா.ஆ.1 அடமானப் பத்திரத்தில் உள்ள கையொப்பம் வெங்கடேசன் கையொப்பம் என்றால் சரிதான். அந்த அடமானப்பத்திரம் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் தேவி, வெங்கடேசன் மற்றும் சாட்சிகள் இருந்தார்கள்.

2. ஒரு சாட்சி வெங்கடேசன் மனைவி ஆவார் மற்றொரு சாட்சி நியாபகம் இல்லை. வெங்கடேசனுக்கு அந்த ஆவணம் படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் ஆமாம் படித்து காண்பிக்கப்பட்டது. எவ்வளவு ரூபாய்க்கு அடமானம் போடப்பட்டது என்றால் ரூ.25ஆயிரத்திற்கு அடமானம் போடப்பட்டது. அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். 13.06.2012ல் வா.சா.ஆ.2 பூர்த்தி பைசல் ரசீதை நான் தான் எழுதினேன். அதே தேதியில் ஒரு கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.4 தயார் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பூர்த்தி பைசல் ரசீது எழுதி பதிவு செய்யப்பட்ட பிறகு தான் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. பூர்த்தி பைசல் எழுதியதற்கு பணம் திருப்பி கொடுக்கப்பட்டதை நான் நேரில் பார்த்தேனா என்றால் கொடுத்ததாக சொன்னார்கள் நான் நேரில் பார்க்கவில்லை. கிரைய ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது என்றால் நேரம் என்னால் சரியாக சொல்ல முடியாது. அன்றைய தினமே ரூ.3,60,000/- சேர்ந்ததாக கணக்கு பார்த்தார்கள். பணம் நேரடியாக கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

3. அன்றைய தினமே கிரைய ஒப்பந்தம் எழுத வேண்டிய அவசியம் என்ன என்றால் கிரையம் செய்து கொள்வதாக பேசியிருப்பதாகவும் கிரைய ஒப்பந்தம் எழுத சொன்னார்கள் எழுதினேன். யார் சொன்னார்கள் என்றால் வெங்கடேசன் சொன்னார்கள். கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு யார் உடன் இருந்தது என்றால் வெங்கடேசன் மனைவி மற்றும் நிஷாந்தி, ரேக்கா இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4ல் உள்ள அனைத்து பக்கங்களிலும் உள்ள கையொப்பம் வெங்கடேசனின் கையொப்பம் தான் எப்போதும் அப்படி தான் கையொப்பம் போடுவார். வா.சா.ஆ.15ல் 19.01.2015 தேதியிட்ட உடன்படிக்கை ஒப்பந்த பத்திரத்தை நான் தயார் செய்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.15ல் உள்ள விவரங்களை நான் தட்டச்சு செய்தேனா என்றால் இல்லை வேறு நபர் தட்டச்சு செய்தார்.

4. அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். அந்த ஆவணத்தில் பாண்டுகளை ஒப்படைத்து விட்டதாக விவரம் உள்ளது அந்த நேரடியாக தெரியுமா என்றால் ஒப்படைத்து விட்டதாக சொன்ன பிறகு தான் ஆவணம் தயார் செய்யப்பட்டது. அதில் பாஸ்கர் மற்றும் முத்து வேல் என்று கையொப்பம் போட்டவர்கள் யார் என்றால் சாட்சி கையொப்பம் போட்டவர்கள். வா.சா.ஆ.15 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.4 செல்லாது என்றாலும் நான் வாதிகளுக்கு ஆதரவாக ஆவணம் தயார் செய்து கொடுத்து இருக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி தயார் செய்த ஆவணங்களில் நான் கையொப்பம் மட்டும் போட்டேன் என்றாலும் அந்த ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அந்த ஆவணங்கள் செல்லாது என்றாலும் சரியல்ல.